## தலைப்பு 119 – மின்சக்தி அமைச்சு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மின்சக்தி அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் மின்சக்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் 2021 யூன் 29 இல் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 2022 மார்ச் 15 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மின்சக்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொளளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு செலவின கூறுகளும் ஒவ்வொரு செலவின தலைப்புபளிற்கான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை இனங்காண்பதற்கு www.newcigas.treasury.gov.lk இல் நாளாந்த அடிப்படையில் அதன் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் மீதான தகவல்களை பதிவேற்றுவதற்கு வேண்டப்பட்ட போதிலும் இது அதன்படி செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட தகவல் முறைமை 2021 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து முறைப்படி நாளதுவரையாக்கப்படும். | நாளாந்தம் தகவல் முறைமை நாளது வரையாக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்திக்கமைய அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டலின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று அட்டுறு அடிப்படையில் தயரிக்கப்பட வேண்டும். காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை மீது பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன. | | |

| | | |
|---|---|---|
| (i) அமைச்சின் கணக்கேடுகளின் பிரகாரம், காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 73,502,415 ஐ காட்டுவதற்குப் பதிலாக ரூபா 271,106 ஆக காட்டப்பட்டிருந்தது. மேலும், அமைச்சின் ஏடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்காத வேறு செலவின தலைப்புகளிற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 84,869 ஆன காசாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அமைச்சால் காசுப்பாய்ச்சல கூற்று காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு வழிகாட்டலைப் பின்பற்றி வடிவமைக்கப்பட வேண்டும். |
| (ii) அமைச்சின் ஏடுகளின் பிரகாரம், ஆகக்கூடிய கட்டுநிதி ரூபா 214,311,106 ஆக உள்ள போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் இது ரூபா 214,176,985 ஆக பதியப்பட்டுள்ளதுடன் ரூபா 134,121 ஆக இருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) அமைச்சின் ஏடுகளின் பிரகாரம், ஆளணி சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 157,691,642 ஆக உள்ளது, ஆனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 150,891,122 ஆக பதியப்பட்டதுடன் ரூபா 6,800,520 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) காசுப் பாய்ச்சல் கூற்றில் உதவு தொகைகள் மற்றும் மாற்றங்கள் மீதான செலவினம் ரூபா 13,369,188 ஆக இருந்த போதிலும் அமைச்சின் ஏடுகளின் பிரகாரம், இந்த பெறுமதி ரூபா 12,992,632 ஆக இருந்ததுடன் ரூபா 376,555 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (v) காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறு தலைப்புகள் மீதான செலவினம் ரூபா 17,905,765 ஆக இருந்த போதிலும் அமைச்சின் ஏடுகளின் பிரகாரம், இந்த பெறுமதி ரூபா 104,906,178 ஆக இருந்ததுடன் ரூபா 87,000,413 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (vi) காசுப் பய்ச்சல் கூறறில் கட்டுநிதி தீர்ப்பனவு ரூபா 5,577,197 ஆக இருந்த போதிலும் அமைச்சின் ஏடுகளின் பிரகாரம், இந்த பெறுமதி ரூபா 6,145,370 ஆக இருந்ததுடன் ரூபா 568,173 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (vii) அமைச்சின் ஏடுகளின் பிரகாரம், முற்பண அறவீடுகள் ரூபா 11,094,783 ஆக இருந்தது ஆனால், காசுப்பாய்ச்சல் கூற்றில் இது 626,863 ஆக இருந்ததுடன் ரூபா 10,467,920 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (viii) அமைச்சின் ஏடுகளின் பிரகாரம், முற்பண கொடுப்பனவுகள் ரூபா 11,685,700 ஆக இருந்தது ஆனால், காசுப்பாய்ச்சல் கூற்றில் இது 3,427,350 ஆக இருந்தது. காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவு ரூபா 8,258,350 ஆல் குறைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ix) நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு நடவடிக்கைகளின் கீழ் வைப்பு பெறுவனவுகளாக ரூபா 1,565,680 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் ஏடுகளின் பிரகாரம், இது ரூபா 2,855,336 ஆக | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் ரூபா 1,289,656 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | | |
| | (x) நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு நடவடிக்கைகளின் கீழ் வைப்பு கொடுப்பனவுகளாக ரூபா 2,517,587 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் ஏடுகளின் பிரகாரம், இது ரூபா 3,504,886 ஆக இருந்ததுடன் ரூபா 987,299 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | 2008.02.06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்கம் மற்றும் சுற்றறிக்கை மற்றும் 05/2018 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுமக்களிற்கு அதிகளவான வினைத்திறன் மற்றும் ஆக்கபூர்வமான சேவையை வழங்குவதற்கு தேவையான பின்னணியை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள்/ வாடிக்கையாளர் இயல்பு இணங்கியிருக்கவில்லை. | நாட்டு மக்கள்/ வாடிக்கையாளர் இயல்பை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும். |
| (இ) | 2018.01.24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், குறித்த நிறுவனத்திற்கான மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது ஆனால் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கி தயாரிக்கப் பட்டிருக்காததுடன் அமைச்சின் முழு உத்தியோகத்தர்களிற்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | 2021.03.18 ஆந் திகதிய PE/IA/104VoI.I ஆம் இலக்க என்னுடைய கடிதம் மூலம் மனிதவள அபிவிருத்தி திட்டத்தின் பிரதி உங்களிற்கு அனுப்பபட்டிருந்தது. | சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கி மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் சகல உத்தியோகத்தர்களிற்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதிப் பிரமாணம் 756(6) இன் பிரகாரம், சகல வருடாந்த கணிப்பீட்டு சபை அறிக்கைகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆனால் அமைச்சு வாகனங்கள் தொடர்பான கணப்பீட்டுச் சபை அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டு சபை அறிக்கைகள் 2021.03.03 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சிற்கு சொந்தமான சகல சொத்துக்களினதும் கணிப்பீட்டு சபை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | நிதிப்பிரமாணம் 110 இற்கமைய வாகன விபத்துகள் தொடர்பில் பேணப்பட வேண்டிய நட்டங்கள் மற்றும் சேதங்களிற்கான பட்டியலை அமைச்சானது வைத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இற்கமைய வாகன வித்துகள் தொடர்பான தகவல்களைக் கொண்டிருக்கின்ற புதிய ஆவணங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | நிதிப்பிரமாணம் 110 இற்கமைய அவற்றில் வழங்கப்பட்ட படிவத்திற்கமைய சேதங்களிற்கான பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஊ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1 மற்றும் 4.2.2 இற்கமைய குறைந்தது 3 ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பர்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் பட்டியல் மற்றும் ஒவ்வொரு கொள்வனவின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரையான கொள்வனவு நடைமுறைகளின் படிமுறைகளை விபரிக்கின்ற காலக்கிரமான பிரதான கொள்வனவுத் திட்டம் தயரிக்கப்பட வேண்டிய போதிலும் இது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | மின் சக்தி அமைச்சு மற்றும் மின்சக்தி அமைச்சு அலுவலகம் தேவையான தேவைப்பட்ட மின்வலு கொள்வனவு செய்தலை கருத்கொண்டதுடன் தேவையான நிதிகளும் கிடைத்திருந்தது. | வழிகாட்டலைப் பின்பற்ற வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்காமையால் நோக்கத்தை செயற்படுத்த தவறியமை, நோக்க செயற்பாடுகளிற்கு முரணான நடவடிக்கைகள், எதிர்பார்க்கப்பட்ட குறைபாடுகள் மற்றும் அறிக்கை மட்டங்களை அடையத்தவறியமை என்பவற்றினை பரீட்சிக்க முடியவில்லை. | அமைச்சின் கீழான நிறுவனங்களால் அமுலாக்கப்பட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் காலாண்டு ரீதியாக அதன் முன்னேற்றம் மீளாயப்பட்டதுடன் அந்த விடயங்களிற்காக அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்கான வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்றிக்கையும் 2021 மார்ச் 23 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அண்டுக்கான் செயல் நடவடிக்கை திட்டத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயரிப்பதற்கு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

#### 3.2.1 செயற்திட்ட நிறைவேற்றலில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) **31 MW இயலளவுடைய மொறக்கொல்ல நீர் மின்சார பொறியின் நிர்மாணம்.** | | |
| மொறக்கொல்ல நீர் மின்சார் பொறியின் நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் தேசிய உப மின்நியைத்திற்கு 31 MW | செயற்திட்டத்தினுடைய ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் 2 ஆண்டுகள் தாமதப்பட்டிருந்தது, சுற்றாடல் | குறித்த காலப் பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு |

| | | |
|---|---|---|
| இயலளவு உருவாக்கல் நோக்கத்துடன் 2014 இல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டது, செயற்திட்டத்தின் வேலைகள் 3 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் 2017 இல் தொடங்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 18,809 மில்லியனாக இருந்தது. செயற்திட்டம் உரிய நேரத்தில் தொடங்காமைக்காமையால், பெறப்பட்ட கடனிற்காக கடப்பாட்டு கட்டணங்களாக ஏறத்தாழ ரூபா 28 மில்லியல் (ஐ.அ.டொலர் 177,931) செலுத்த வேண்டியிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 4,113 மில்லியன் செலவழிக்கப் பட்டிருந்ததுடன் பௌதீக முன்னேற்றம் 27 சதவீமான மெதுவான முன்னேற்றத்தைக் கொண்டிருந்தது. | மதிப்பாய்வு அறிக்கை (EIA) தாமதப்பட்டிருந்தது, 2020 இல் நிலவிய கோவிட் 19 நோய்தொற்று காரணமாக பல்வேறு இடையூறுகளால் தாமதப்பட்டிருந்தது.<br><br>ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான கடன் உடன்படிக்கையின் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் பிரகாரம், உரிய கடன் திகதியில் கடன் தொகை கைதவிர்க்கப் பட்டிருக்காமையால் உரிய கடப்பாடுகளிற்காக (கடப்பாட்டுக் கட்டணம்) செலுத்த வேண்டியிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) **தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் மின்வலு வினைத்திறன் அபிவிருத்தி செயற்திட்டம்.**<br>மேல, மாத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் உபநியை இயலளவை அதிகரிப்பதற்கும் பரிமாற்ற சேதங்களை குறைப்பதற்கும் அமுல்ப் படுத்தப்படுகின்ற செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23,720 மில்லியனாக இருந்தது. இது 2015 சனவரியில் தொடங்கி 2018 சனவரியில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. ஆனால், வேலைகள் 2020 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டமானது ரூபா 9,357 மில்லியன் செலவழித்த பின்னர் 2020 திசெம்பர் 31 அளவிலான | JICA அறிவுறுத்தலின் பிரகாரம், ஒப்பந்தகாரர்கள் முன்தகைமைகள் பரீட்சிப்பை மேற்கொள்வதற்கும், கொள்வனவு நடைமுறை மேற்கொள்வதற்கும் செயற்திட்ட ஆலோசனையாளரை நியமிப்பதற்கும் நீண்டகாலம் எடுத்திருந்தது. கோவிட் 19 நோய்தொற்று உள்ளடங்கலான பல்வேறு காரணங்களால் ஒப்பந்தம் பூர்த்தியாக்கல் தவறவிடப்பட்டிருந்தது. | குறித்த காலப் பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து ஏறத்தாழ 3 ஆண்டுகள் தாமதப்பட்டிருந்ததுடன் பௌதீக முன்னேற்றம் 33 சதவீதமாக இருந்தது. | | |
| (இ) **35 MW இயலளவுடன் பரந்தளவான காணி நீர் மின்சார செயற்திட்டம்.**<br>35 MW இயலளவுடன் பரந்தளவான காணி நீர் மின்சார செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 9,424 மில்லியாக உள்ளதுடன் செயற்திட்டமானது 2013 ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கி 2017 ஆகஸ்ட் மாதமளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், இந்த செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி ஏற்கனவே 3 ஆண்டுகள் கடந்த பின்னர் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக நீடிக்கப்பட்டது. மேலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 86 சதவீதமாக இருந்தது. | 2018 சனவரியில் கடன் உடன்படிக்கை திகதி காலாவதியாகியதுடன் உலகளாவிய கோவிட் 19 நோய்தொற்றுடன் செயற்திட்டத்தின் மிகுதி நிதியளித்தலில் சிக்கல் மற்றும் தாமதங்கள் காரணமாக செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் தாமதப்பட்டிருந்தது. | குறித்த காலப் பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2.2 வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மின்வலு உருவாக்கல் ஊடாக புதுப்பிக்கக்கூடிய மின்வலு உருவாக்கும் நோக்கத்துடன் நயினாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவில் போன்ற மூன்று சிறிய தீவுகளிலும் உயர் புதுப்பிக்கக்கூடிய மின்வலு முறைமை கட்டியொழுப்புதற்கான செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட | இந்த செயற்திட்டத்தின் கொள்வனவு நடைமுறை பூர்த்தியாக்குதல் மற்றும் கேள்வி வழங்குதல் நடைமுறைக்கான அமைச்சரவை அனுமதி நிலுவையில் உள்ளது. 2020 ஆம் ஆண்டில் நிர்மாண | குறித்த காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| கிரயம் ரூபா 2,172 மில்லியனாக உள்ளதுடன் செயற்திட்டமானது 2019 இல் தொடங்கி 2022 இல் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு நடைமுறை தெடங்கியதிலிருந்து இன்றுவரை இந்த செயற்திட்டத்தில் எவ்வித பௌதீக முன்னேற்றமும் இருக்கவில்லை. | வேலைகள் தொடங்கப் பட்டிருக்கவில்லை. செயற்திட்டமானது எவ்வித பௌதீக முன்னேற்றத்தையும் அடைய முடியாதிருந்தது. |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 104 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 93 ஆக இருந்தது 11 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டது. | 2020.08.09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்மாணி அறிவித்தல் மூலம் மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு போன் இரண்டு அமைச்சிற்கும் சூரிய, காற்று, நீர் மின்வலு உருவாக்கல் அபிவிருத்தி செயற்திட்டங்கள் உள்ளன. ஆகவே, இந்த அமைச்சின் நோக்கெல்லையின் ஒரு பகுதி இராஜாங்க அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்தது. இதன்படி, மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சின் உத்தியோகத்தர் 104 இற்கு குறைக்கப்பட வேண்டியிருந்தது. | அமைச்சால் முறையாக அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (திட்டமிடல்), பிரதம கணக்காய்வாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் போன்ற பிரான ஐந்து பதவிகள் வெற்றிடமாக உள்ளதுடன் ஆண்டின் போது வெற்றிடங்களை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.07.07 இலிருந்து பணிப்பாளர் (திட்டமிடல்), பதவியின் கடமைகளை செயற்படுத்துவதற்கு அரச சேவை ஆணைக்குழுவால் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் நாயகம் மற்றும் உள்ளக | வேண்டப்பட்டவாறு உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்காய்வாளர் போன்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப தேவையான சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்க பொது நிர்வாக அமைச்சிற்கு வழங்கப்பட்டது. | |
| (இ) | அமைச்சின் மூன்றாம் நிலை அனுமதிக்கப்பட்ட பதவியணி 4 ஆக இருந்ததுடன் அந்த மட்டத்தின் 3 பதவிகளில் 02 நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் மொழிபெயப்பாளர் பதவிகள் 2020 திசெம்பர் 31 வரையும் நிரப்பப்ட்டிருக்கவில்லை. | மொழிபெயப்பாளர் பதவி வெற்றிடம் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவித்திருந்ததுடன் இருக்கின்ற வெற்றிடங்களை நிப்புவதற்காக நிபுணத்துவ உத்தியோகத்தர்களை சேர்த்தல் தொடர்பில் காலத்திற்கு காலம் பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவித்திருந்தது. | வேண்டப்பட்டவாறு உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2020 செப்தெம்பரிலிருந்து இலங்கை மின்சார சபைக்கு இணைக்கபடப்ட இரண்டு ஊழியர்கள் அமைச்சால் அனுமதிக்கப்பட்ட இரண்டு நிறைவேற்று தரமல்லாத பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்காக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். | கௌரவ அமைச்சில் அறிவுறுத்தலில் அமைச்சின் தனிப்பட்ட உத்தியோகத்தரிற்காக வேண்டப்பட்ட பாதுகாப்பு சேவைகள் பதவிகளில் சேவையாற்றுகின்ற இரண்டு மின்சார சபை ஊழியர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (உ) | அமைச்சின் அனுமதிக்கப்பட்ட பதவியணியின் ஒரு பகுதி இலங்கை மின்சார சபைக்கு இணைக்கப்பட்ட 19 ஊழியர்கள் மீளாய்வாண்டின் போது அமைச்சில் வேலைக்கு அமர்த்தப்பட்டதுடன் சில உத்தியோகத்தர்கள் 2009 இலிருந்து இணைக்கப்பட்டிருந்தனர். | வேண்டப்பட்டபோது அமைச்சின் தகவல் துறை பிரிவு பதவியின் கடமைகளை மேவுவதற்கு தரவு நிரற்படுத்தல் ஆலோசகர் பதவியிலுள்ளவர் இணைக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான இரண்டு மற்றும் அமைச்சின் பாதுகாப்பிற்கான 16 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இந்த அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்தனர். | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் இணங்கியொழுக வேண்டும். |